**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 138/2021**

**Deposition of P.W.** 3

Name : சேதுநாத்

S/o, D/o, W/o : வேலாயுதன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**04.06.2025**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தக்கலையில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். இவ்வழக்கின் எதிரி சுஜினை பார்த்தால் தெரியும். (இன்று எதிரி ஆஜராகவில்லை, எனவே சாட்சியால் அடையாளம் காட்ட இயலவில்லை) எதிரி அரசு பேரூந்துக்கு முன்னர் வேன் ஓட்டி வந்ததால் அரசு பேருந்துக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. ஏன் அவ்வாறு அரசு பேருந்திற்கு முன்னர் வேன் ஓட்டி வருகிறாய் என்று கேட்டதற்கு எதிரி என்னுடன் வந்த செல்லத்துரை என்பவரை அசீங்கமாக பேசி அடிக்க வந்தார். வேனை எங்கள் மீது மோத வந்தது போல் ஓட்டி வந்து சென்று விட்டார். வேனின் பதிவு எண் ஞாபகமில்லை. 26.03.2018ம் தேதி மாலை 05.30 மணிக்கு ஆற்றூர் புளியம்மூடு சந்திப்பில் வைத்து சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்ததும் திருவட்டார் காவல்நிலையம் போனோம்.

செல்லத்துரை புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அரசு அனுமதி இல்லாமல் பயணிகளை ஏற்றினால் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் மோட்டார் வாகன ஆய்வாளர் நடவடிக்கை எடுக்க அதிகாரம் படைத்தவர் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் வாகனத்தை நிறுத்தி ஆய்வு செய்ய அதிகாரம் படைத்தவர் என்றால் சரிதான். போக்குவரத்து பணிமனை ஊழியர்களுக்கு வாகனங்களை வழிமறித்து ஆய்வு செய்ய அதிகாரம் கிடையாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எதிரி ஓட்டி வந்த வேனை கை காட்டி நிறுத்தியதாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வேனை கண்டுபிடிக்குமாறு எங்களுக்கு எழுத்து பூர்வமாக உத்தரவு கொடுக்கவில்லை. பொது மக்கள் வேன் இயக்குவது தொடர்பாக புகார் கொடுக்கவில்லை. எதிரி எங்கள் முன்னர் பேருந்து நிறுத்ததில் வேனை நிறுத்தி பயணிகளை ஏற்றி சென்றதாக போலீசார் விசாரணையில் கூறவில்லை. சம்பவ நாளில் எதிரி ஒட்டி வந்ததாக சொல்லப்படும் வேனில் இருந்த நபர்கள் என்னிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எதிரி சட்ட விரோதமாக வேனை ஓட்டி வரவில்லை என்றால் சரியல்ல, சம்பவ இடத்திலிருந்து திருவட்டார் காவல் நிலையம் 1 கி.மீ தூரம் தான் இருக்கும். திருவட்டார் காவல்நிலையத்தை கடந்து தான் அரசு மணிமனைக்கு செல்ல வேண்டும். சம்பவ நாளில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடக்ககாததால் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட பணிநேரம் முடிந்து வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். அ.சா.1–ற்கு

காயம் எதுவும் ஏற்படவில்லை. அ.சா.1–ற்கும், எதிரிக்கும் முன்விராதமும் இல்லை. முன்விரோதம் இல்லாததால் அ.சா.1–ஐ கொலை முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. மேலாளர் சொல்லி புகார் கொடுத்தோம் என்று போலீசாரிடம் கூறியுள்ளோம் என்றால் சரிதான். அ.சா.1–ம், மேலாளரும் எதிரி மீது பொய்யான புகாரை அபிவிருத்தி செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேலதிகாரிகளின் வேண்டுகோள் படி நடக்காத சம்பவத்தை, நடந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையின் போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த எதிரி என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். போலீசார் சொல்லி கொடுத்து தற்போது மிகைப்படுத்தி சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்பவம் இல்லை என்றால் சரியல்ல.